Registered as a NewsPaper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தலைமை ஆசிரியர் அலுவலகம், 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 264

யாழ்ப்பாணம் ஐப்பசி 17 ரமழான் 14 புதன்கிழமை (3-11-71)

பச்சைச் சந்தனம்

யந்திரத்தால்
அரைக்கப்பெற்ற வாசனை நிறைந்த

பச்சைச்சந்தனம்

எப்பொழுதும் மலிவான விலைக்குக் கிடைக்கும்

ஆ. இராசையா அன் சன்ஸ்

(மருந்துக் கடை)
69, கே. கே. எஸ் ரோட்
யாழ்ப்பாணம்.

## டாக்ஸி கட்டணம் உயர்வு

கொழும்பு, செவ்.

கொழும்பிலுள்ள டாக்ஸிக்காரர்களில் பலரும் பெற்ரோல் விலை ஏற்றப்பட்டதின் பின்னர் தங்கள் மீட்டர்களை மாற்றி அமைத்துக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

முன்னர் 70 சதத்துக்குப் போன இடங்களுக்கு செல்ல இப்பொழுது டாக்ஸிக்காரர் 1-30 சதம் வரை எடுக்கிறார்களாம்.

இப்போதுள்ள சட்டங்களின்படி மு. ப. 6 மணியிலிருந்து பி. ப. 9 மணி வரை

[6-ம் பக்கம் பார்க்க]

# புதிய பட்ஜட் சாதாரண மக்களைப் பாதிக்குமா?

## அரசாங்க எம். பி.க்கள் கவலை

கொழும்பு, செவ்வாய்

வரவு--செலவுத்திட்டத்தில் இடம்பெறக்கூடிய வாழ்க்கைச்செலவு சம்பந்தமான அம்சங்களை ஆராய்வதற்காக அரசாங்கக்கட்சி ஆட்சி மன்றக்குழுவின் விசேஷ கூட்டமொன்றைக் கூட்டும்படி 47 எம். பி.க்கள் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

வரவு-செலவுத் திட்டம் மக்கள் பிரதிநிதிகள் சபையில் இம்மாதம் 10-ந் திகதி சமர்ப்பிக்கப்படவிருப்பது தெரிந்ததே.

வெளிநாட்டு வங்கிகளைத் தேசியமயமாக்குவது, மக்களிடமிருந்து அதிக தியாகங்களை எதிர்பார்ப்பது போன்ற அம்சங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெறுவதை இந்த எம். பி.க்கள் விரும்பவில்லையென்று தெரிகிறது. பொருளாதாரநெருக்கடிகளைச் சமாளிப்பதற்காக சமூகப்பணிகளுக்கு அளித்து வரும் மானியங்களை அரசாங்கம் குறைக்கக்கூடும் என்று இந்த எம். பி.க்கள் அஞ்சுவதாகத் தெரிகின்றது.

இதேவேளையில் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி தொழிலாளர்கள் விவசாயிகள் ஆகியோரை மேலும் கஷ்டப்படுத்தாதவாறு சோஷலிசபொருளாதார நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் எனக் கோரி இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளதாகக் கட்சியின் ஆங்கிலவார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

மேலும் இக்கட்சி 9 பிரிட்டிஷ் வங்கிகள், 3 இந்திய வங்கிகள், பாகிஸ்தானிய வங்கி ஆகியவற்றையும் மற்றும் உள்ளூர், அன்னிய முதலீட்டு நிறுவனங்களையும் எரிக்கரைப் பத்திரிகை ஸ்தாபனத்தையும் தேசிய மயமாக்கவேண்டும் எனக் கோருகிறது. தொழிற்சங்க நிறுவனங்களின் சக்திவாய்ந்த இணைப்பு கமிட்டியொன்றும் மாஸ்கோ கம்யூனிஸ்ட்கட்சியின் மேற்படி கோரிக்கையை ஆதரிக்கிறது.

ஏகபோக உரிமைகளையுடைய உள்ளூர் அன்னிய நிறுவனங்களைத் தேசியமயமாக்க வேண்டும் எனவும் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவேண்டும் எனவும் மேற்படி தொழிற்சங்க இணைப்புக்கமிட்டி தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. இத்துடன் பிரதமரைப் பேட்டிகாணப்போவதாகவும் கமிட்டி தீர்மானித்துள்ளது. (சி.பி.ஏ)

## சர்வோதய இயக்கத்துக்கு ஐரோப்பாவில் வரவேற்பு

கொழும்பு, செவ்வாய்

சர்வோதய இயக்கம்பற்றி ஐரோப்பிய நாடுகள் புரிந்து கொள்ள ஆரம்பித்துள்ளன வென்று 1969-ம் ஆண்டு மாக்ஸஸே பரிசுபெற்றவரான இலங்கையைச் சேர்ந்த திரு. ஆரியரத்ன கூறினார்.

ஐரோப்பிய நாடுகளில் மூன்று வாரங்கள் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு திரு. ஆரியரத்ன நேற்று முன்தினம் நாடுதிரும்பினார்.

ஜெனிவாவில் நடைபெற்ற இளைஞர்கள் பற்றிய கருத்தரங்கொன்றில் பங்குபற்றிய பின்னர் திரு. ஆரியரத்ன மேற்கு ஜெர்மனி, நெதர்லாந்து, பெல்ஜியம், ஸ்வீடன் ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்து பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

இந்த நாடுகள் பலவற்றிலும் சர்வோதய இயக்கம் பற்றிய செய்தியை அவர் பரப்புவதில் பெரிதும் அக்கறைகாட்டியுள்ளார்.

## கிழக்கு பாக். பற்றிய விஷயமறியாதவர்கள்

லண்டன், நவ. 2

கிழக்குப் பாகிஸ்தானில் சாமூக நிலைமை ஏற்பட்டு விட்டதாக கூறுகிறவர்கள் ஒன்றில் விவரம் அறியாதவர்களாக இருக்கவேண்டும் அல்லது வேண்டுமென்றே உண்மையைத் திரித்துக் கூறுகிறவர்களாக இருக்க வேண்டும்.

இவ்வாறு இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி லண்டன் பி.பி.ஸி. வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறியிருக்கிறார். இந்திய பிரதமர் பிரிட்டிஷ் அரசாங்கத்துடனான தமது பேச்சுகளை முடித்துக் கொண்டுவிட்டார். பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சர் திரு. அலெக் டக்ளஸ் ஹியூம் நேற்று திருமதி காந்திக்கு விருந்தொன்று அளித்தார்.

திருமதி காந்தி தங்கியிருக்கும் ஹொட்டலில் சேர் ஹியூம் சுமார் ஒரு மணி நேரம் தங்கி திருமதி காந்தியுடன் ஆலோசனைகள் நடத்தினார். கிழக்கும் பாகிஸ்தானில் சில்கட் அரங்கில் விடுதலைப் படையினர் நேற்று முதல் பாகிஸ்தான் படையினருடன் கடும் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள் என்றும் இந்தச்சண்டை இன்னமும் முடிவுறவில்லையென்றும் புதுடில்லிக்கு கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன. பாகிஸ்தான் சிப்பாய்கள் பலரை விடுதலைப் படையினர் கொன்றுவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

## அமெரிக்க திட்டம்

நியூயோர்க், நவ.2

சமாதான நோக்கங்களுக்காக செயற்கைக் கிரகங்களைச் செலுத்துவதற்கு ஐரோப்பியநாடுகளுக்கு உதவும் ஒரு திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது.

## மரண அறிவித்தல்

### ஆர். சி. எஸ். குக்

கட்டுறவு இலாகா சிரேஷ்ட உதவி ஆணையாளர் நிச்சலஸ் கிளீவ்லன்ப் செல்வராஜ குக் காலமானார். இவர் மகேஸின் அன்புக்கணவராவார். அன்னாரின் சமச்சடங்குகள் யாழ்ப்பாணம் 3-ம் குறுக்குத்தெருவிலுள்ள "மகேஸ் பவனத்தில்" இன்று (3-11-71) காலை 8 மணிக்கு நடைபெறும் காலை 8-30 மணிக்குப் பூதவுடல் நல்லடக்கத்துக்கு வட்டுக்கோட்டை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

பீட்டர் கூறுகிறார்:

## 'ஒன்றரை லட்சம் பேருக்கு வேலை வழங்கினேம்'

காலி, செவ்வாய்

கடந்த சில மாதங்களுக்குள் கூட்டணி அரசாங்கம் வேலையற்றிருக்கும் ஏறத்தாழ ஒன்றரை இலட்சம் பேருக்கு வேலைவழங்கியுள்ளது.

இத்தகவலை விடைப்பு அமைச்சர் திரு பீட்டர் கெனமன் வெளியிட்டார். இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் காலி கிளைக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினார்.

இந்த நாட்டில் இதுவரையில் சோஷலிஸ அரசு எதுவும் அமைக்கப்படவில்லை. 1970ம் ஆண்டு மே 27ம் திகதி இந்த நாட்டில் சோஷலிஸ அரசாங்கம் ஒன்றுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது என்றார் திரு. கெனமன்.

கூட்டணி அரசு தொழிலாளர்களுக்கு பெரும் சேவையாற்றியிருக்கிறது. [illegible] ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பல பொது கூட்டுத்தாபனங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தற்கால முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் ஆனால் பிற்போக்குவாதிகள் இவைகளைக் குலைத்து விடுவர் என்றார் அவர்.

## ஆசிரியர்களுக்கு புதியமாற்றத்திட்டம்?

### 6-ம் திகதி தமிழரசு கூடும்

யாழ்ப்பாணம், புதன்

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு இம்மாதம் 6-ம் தேதி பிற்பகல் யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக்காரியாலயத்தில கூடுகிறது

திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் தமிழ் மக்களை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்னைகள் பற்றி ஆராயப்படவிருக்கிறது

கருத்திருத்துறை, பசவ பயிற்றப்பட்ட தமிழாசிரியர், விசேஷ பயிற்சி ஆசிரியர், ஆங்கிலபட்டதாரி ஆசிரியர்கள் ஆகியோரைப் பற்றியசேவை விபரங்களைக் கல்வித் திணைக்களம் திரட்டி வருகிறது.

மேலும் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது வெளியிடங்களில் கடமைபுரியாத ஆசிரியர்கள் பற்றியும் தகவல்கள் கோரப்பட்டுள்ளன. அடுத்தாண்டு ஆரம்பத்தில் இப்பட்டியலிலுள்ள 40 வயதுக்குக் குறைந்த ஆசிரியர்கள் பிறஇடங்களுக்கு மாற்றப்படலாமெனக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஒட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) எஞ்ஜினியர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராஜா மெசின் கொம்பனி 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3709

திருநாளா! திருமணமா!! கலப்பற்ற அசல்பட்டுச் சேலைகள், வேட்டி சால்வைகளுக்கு விஜயம் செய்யுங்கள்: வசந்தபுரம் சில்க்ஸ், 7, 2-ம் ஒழுங்கை, பிரவுன் வீதி, யாழ்ப்பாணம். 3639

அப்பளம் தயாரிப்புக்கேற்ற உழுந்துமா, நவீன இயந்திரங்கள் மூலம் அனுபவமிக்க தொழிலாளர்களால் அரைத்து, அரித்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்: முகமது கிரைன்டிங் மில்ஸ், 443, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 3675

கலவித நவதானியங்களும், கோழித்தீனி வகைகளும், மஞ்சள் சரக்குவகைகளும், வெவ்வேறு யந்திரங்கள் மூலம் அரைத்துக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு:- V. சிவானந்தன் மனோன்மணி மில்ஸ், 46/1 பிரவுண் றோட், யாழ்ப்பாணம். 3694

மணி மார்க் சுத்தமான வரகு அரிசி நீரிழிவு நிவாரணத்திற்கு டாக்டர்களினால் சிபார்சு செய்யப்பட்டுள்ளது. சொந்த மேற்பார்வையில் தயாரிக்கப்பெற்றது. P. முத்தையா, வசந்தா இன்டஸ்றீஸ், நாவலடி லேன், வண். மேற்கு, யாழ்ப்பாணம். 3706

### விற்பனைக்கு

ராதா படை மருந்து தேமல் கக்கல்பற்று சகலவிதமான அரிப்பு நீர்வடியும் சொறிகளுக்கும் சிறந்த பூச்சு மருந்து. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார்தெரு, கொழும்பு. 3708

## கேள்விவிளம்பரம்
### பண்டத்தரிப்பு கிராமசபை

பண்டத்தரிப்புக் கிராமச் சபைத் தலைவராகிய என்னால் 12-11-71-ம் திகதி முற்பகல் 9-00 மணி வரைக்கும் கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் அரசினர் நன்கொடை வேலைகளுக்கு எமது கிராமச்சபையில் பதியப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

உத்தியோக பூர்வமான பத்திரங்களில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் தலைவர், கிராமச் சபை பண்டத்தரிப்பு என்ற விலாசத்திற்கு அனுப்பப் படுதல் வேண்டும். கேள்வியின் நகல் பிரதிகள் யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியியலாளருக்கும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அதே நேரத்தில் அனுப்பப் படுதல் வேண்டும். கேள்வி விளம்பரம் கொண்ட கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்களை 10-11-71-ம் திகதி முற்பகல் 12-00 மணி வரைக்கும் கிராமச்சபை அலுவலகத்தில் உரிய கேள்விப் பணம் ரூபா 50/- செலுத்தியும் பத்திரக்கிரயம் ரூபா 15/- செலுத்தியும் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை எமது அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

பத்திரக்கிரயம் ரூபா 15/- திருப்பிக்கொடுபடமாட்டா.

#### வேலைகளின் விபரம்

1. மாதகல் வீனான் றோட்.
2. மாகியப்பிட்டி ஒழுங்கை.
3. மாதகல் சத்திரமா றோட்.
4. இளவாலை முள்ளானை றோட்.

சி. சி. கனகசபாபதி ஜே. பி,
தலைவர்
கிராமச்சபை,
பண்டத்தரிப்பு.

கிராமச்சபை அலுவலகம்,
பண்டத்தரிப்பு. 3107

### தவறிவிட்டது

எனது கார் லைசென்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ. காசிப்பிள்ளை (செ. காசிப்பிள்ளை அன் கோ), 82, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 3704

### அடகு நகை ஏல விற்பனை

பூண்டுலோயா: மேட்டுக்கடை வீதி 10-ம் இலக்க கடையில் நகை அடகுபிடிக்கும் P. துரையா அவர்களிடம் 1-11-67 முதல் 31-10-70 வரையில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகளை 16-11-71 செவ்வாய்க்கிழமை காலை 9-30 மணி முதல் மேற்படி கடையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

R. M. P. முத்துராஜ்,
ஏலதாரர்
ஆர். எம். பொன்னுசாமி அன். சன்ஸ்.
49, திருகோணமலை வீதி,
கண்டி. 3104

### அடகு நகை ஏல விற்பனை

பூண்டுலோயா: பணிக்கடை வீதி 5-ம் இலக்க கடையில் நகை அடகு பிடிக்கும் ம. தெ. வராமபிள்ளை அவர்களிடம் 10-6-65 முதல் 31-12-69 வரையில் அடகு வைத்து மீட்கப்படாத நகைகளை 16-11-71 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணி முதல் மேற்படி கடையில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

R. M. P. முத்துராஜ்,
ஏலதாரர்
R. M. பொன்னுசாமி அன் சன்ஸ்
49, திருகோணமலை வீதி
கண்டி. 3105

### கல்வி

உயர் கணிதம், பிரயோக கணிதம், தூயகணிதம் ஆகிய பாடங்களில் திறமையுடைய பேராதனைப் பல்கலைக் கழகப் பட்டதாரியினால் உயர்தர, சாதாரண வகுப்புகளுக்குப் பாடம் வீட்டுக்கு வந்து சொல்லிக் கொடுக்கப்படும். அ. சச்சிதானந்தன், ஆனந்த பவனம் உடும்பிராய். 3713

### மாதர் முன்னேற்ற சங்கம்

சுழிபுரம், செல்வி பெண்கள் கிறமைத் தொழிற்கல்விக்கு அரசாங்கம் மாதர் முன்னேற்றச் சங்கங்களின் மூலம் ஆரம்பித்து நடத்துவதனாலும் வீட்டுத் தேவையான உபஉணவுப் பயிர்களைத் தமது வீட்டிலே உண்டாக்குவதினாலும், ஆடு மாடு கோழி முதலியன வற்றை வீட்டிலே வளர்ப்பதனாலும் ஊதியம் தேடித் தம் பெற்றோரின் வணவுக்கு உறுதுணையாக இருக்கமுடியும். இவைச் செயல்படுத்துவதற்கு உதவியளிக்குமுகமாகவே அரசாங்கம் மாதர்சங்கங்களை ஸ்தாபிக்கிறது" என்று மாதகல் மத்திய மாதர் முன்னேற்றச்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வலிமேற்குப்பகுதி கிராமஅபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. நவரத்தினம் கூறினார்.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவி: திருமதி யோகமலர் செம்பர்லேன், உபதலைவி: செல்வி பற்றீஷியா தோமஸ், இணைக்காரியதரிசிகள்: செல்விகள் பவித்தாராணி, இராசரத்தினம், ம. யோகமலர், பொருளாளர்: செல்வி திரேசாராணி அந்தோனிப்பிள்ளை. நிர்வாகசபையினர்: செல்விகள் லிங்கேஸ்வரி சாரங்கபாணி, ச. ருக்மணி, யோ. பிறசன் ரேஷல், ம. புஷ்பதேவி லீலிமலர் ஞானப்பிரகாசம் ராஜேஸ்வரி சந்திரசேகரா.


ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - வி. என். ஜானகி, மாலியா, மாதுரிதேவி நடித்த
மோகினி

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்,
ஜெய்சங்கர் — விஜயலலிதா நடித்த
நூற்றுக்கு நூறு

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சௌகார்ஜானகி - ரவிச்சந்திரன் (இரு வேடங்களில்) நடித்த
காவியத்தலைவி

தமிழ் நாட்டில் 58 வாரங்களும், ஈழத்தின் தலைநகர் கொழும்பில் 275 நாட்களும் தொடர்ச்சியாக காட்சியளித்து பெரும் சாதனையை நிலைநாட்டி
இப்பொழுது யாழ். மக்களுக்கு விருந்தளிக்கின்றது

லிடோ [யாழ்நகர்]
காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30.
ஆராதனா
(ஈஸ்ட்மன்கலர் சித்திரம்)
ராஜேஷ்கன்னா ★ ஷர்மிளா தாகூர்
சுஜித்குமார் ★ பரீடா ஜலால்
நடித்தது.

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி: 3 காட்சிகள், சனி, ஞாயிறு: 4 காட்சிகள்.





★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
★ நாகேஷ்
★ அசோகன்
★ ஷீலா
நடித்த
மூன்றெழுத்து
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி சினிமா (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சிவாஜி — பத்மினி நடித்த
விளையாட்டுப்பிள்ளை

நாகமஸ்சினிமா
கன்னாகம்
தினசரி: 4-30
சனி, ஞாயிறு: 10-30
SERALGETI

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
வெண்சங்கு

வெல்லிசினிமா (மானிப்பாய்)
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி— பத்மினி
தில்லானா மோகனாம்பாள்

MANOHARA
Jaffna
Daily 4 Shows
Kirk Douglas
Henry Fonda
in
THERE WAS A CROOKED MAN
(Scope-color)


## திருமண அழைப்பு

பத்மநாதன் — சாரதா

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சிவசுப்பிரமணியம் பத்மநாதனுக்கும் நவாலி இராஜசுந்தரம் சாரதாவுக்கும்

இன்று (3-11-71) புதன்கிழமை காலை 8-00 மணிக்கு நவாலி அட்டகிரிக் கந்தசுவாமி கோவிலில் நடைபெறவிருக்கும் திருமணத்திற்கு உறவினரையும் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மா. சிவசுப்பிரமணியம் தம்பதிகள்
அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

இ. இராஜசுந்தரம் தம்பதிகள்
நவாலி வடக்கு,
மானிப்பாய்.
3108


திரையுலகம் இதுவரை கண்டிராத மாபெரும் துணிகரப் படைப்பு!
ஈடிணையற்ற வெற்றிச் சித்திரம்!!
இப்பொழுது யாழ். மக்களை மகிழ்விக்கத் திரையிடப்படுகின்றது
யாழ். றீகல் திரையில்
தினசரி: காலை 10-00, மாலை 5-15, 7-15 மணிக்கும்
AFRICAN SAFARI
[ஆபிரிக்கன் சபறி]
[கலர் படம்]
குறிப்பு: 50 பேருக்குக் குறையாத பாடசாலை மாணவர் குழுவுக்கு விசேட காலைக்காட்சி ஒழுங்கு செய்து தரப்படும். தொலைபேசி: 360

தினசரி: பி. ப. 2-00, இரவு 10-00
சிவாஜி—ஜெயலலிதா—நாகேஷ்
நடித்த
கலாட்டா கல்யாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ஒரிஸா மாகாணத்தில்

# புயல், கடல் கொந்தளிப்பு; 10 ஆயிரம் பேர் பலியாகினர்

## இந்திரா லண்டனிலிருந்து அனுதாபம்

புதுடில்லி, நவ. 2
வடகிழக்கு இந்தியாவில் ஒரிஸா மாகாணத்தில் அண்மையில் ஏற்பட்ட புயலினாலும், கடல் கொந்தளிப்பினாலும் சுமார் 10 ஆயிரம் பேர் பலியாகியிருப்பதாக இப்பொழுது செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அதிகார பூர்வமான தகவல்களின்படி 5 ஆயிரம்பேர் மாத்திரமே மரணமாகியிருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

கடந்த சனியன்று வீசிய புயற்காற்று மூன்றுநாட்களுக்குத் தொடர்ந்து வீசியதாகவும் இதனால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கட்டாக், பாலப்பூர் ஆகிய கரையோர நகரங்கள் மீது கடல் பெருக்கெடுத்து சுமார் 5 மீட்டர் உயரத்துக்கு அலைகள் வீசியதாகவும் இதனால் அந்த நகரங்களில் பலத்த நாசம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. என்ன நடந்தது என்பதைப்பற்றி தகவல் கொடுப்பதற்கு இந்தக்கிராமங்களில் ஒரு உயிர்கூடமிஞ்சியதாகத் தெரியவில்லையாம்.

சாலைகளாவும், மரங்களாலும், மண்சரிவுகளாலும் மூடிக்கிடக்கின்றன. நாசத்தின் அளவு பற்றிய சரியான விபரம் இன்னமும் வந்து சேரவில்லையாம். கரையோரங்களில் இருந்த வீடுகள் எல்லாமே சேதமுற்றுள்ளன. வீடுகளின் கூரைகள் யாவும் காற்றினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

இத்துயரம் தோய்ந்த நிகழ்ச்சி குறித்து இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி பெரிதும் கவலைதெரிவித்து செய்தியொன்றை விடுத்துள்ளார். தற்பொழுது இங்கிலாந்திலிருக்கும் இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி ஒரிஸாவில் ஏற்பட்டுள்ள இந்த புயல் கொடுமை குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துள்ளார். லண்டனில் பத்திரிகை நிருபர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் அவர் இந்தச் சம்பவம்பற்றி கவலையுடன் குறிப்பிட்டார். நாசம் விளைந்த பகுதிகளில் போர்க்காலத்தில் நடைபெறுவதுபோல் உதவிப்பணிகள் நடைபெற்றுவருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தாராளமாக உதவி புரியும்படி மத்திய அரசை ஒரிஸா அரசாங்கம் கேட்டிருக்கின்றது.

ஒரிஸா கவர்னர் பாதிக்கப்பட்ட இடங்களை போய் பார்வையிட்டார்.

## திரிபுராவில் ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, நவ. 2
யூனியன் பிரதேசமான திரிபுராவில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இது நான்கு மாதங்களுக்கு அமுலில் இருக்கும். இதன் காரணமாக முதன்மந்திரியும் இதரமந்திரிகளும் அதிகாரம் இழந்துள்ளனர். திரிபுரா அரசாங்க நிர்வாகி அனுப்பிய அறிக்கையொன்றின் மீது ஜனாதிபதி கிரி இந்த நடவடிக்கை எடுத்துள்ளார்.

## விசேஷ வரிச்சலுகை

கோட்டை, செவ்
அரசின் தொழில் வளர்ச்சிக் கொள்கையை அனுசரித்து புதிய தொழில்களை ஆரம்பிக்கும் உள்நாட்டு வெளிநாட்டு பிரமுகர்களுக்கு வரிச்சலுகைகளையும், நிதிவசதிகளையும் செய்து கொடுக்க அரசு முடிவுசெய்திருப்பதாகத் தெரிகின்றது இங்கு அரசாங்கத்துடன் சேர்ந்து ஆரம்பிக்கப்படும் புதிய தொழில்களுக்கு விசேஷசலுகைகள் அளிக்கப்படும் என்று தெரிகின்றது.

பாக். பற்றிய யு. எஸ்.

## கொள்கையை மாற்ற கோருகிறார் கென்னடி

நியூயோர்க் நவ. 2
பாகிஸ்தான் சம்பந்தமான நிக்ஸன் அரசின் கொள்கையை மாற்றிக் கொள்ளவேண்டும் என்று செனட்டர் எட்வர்ட் கென்னடி வற்புறுத்தியுள்ளார்.

கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைகளில் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பயமுறுத்தலுக்கு அமெரிக்காவே தனிப்பட்ட முறையில் பெருமளவில் பொறுப்பேற்க வேண்டும் என்று செனட்டர் கென்னடி கூறினார்.

கிழக்குப் பாகிஸ்தான் நெருக்கடிகளுக்கு பாகிஸ்தான் அரசுதான் காரணம். தேர்தலில் வெற்றி பெற்ற ஒன்றுதான் ஷேக் முஜிபுர் ரஹ்மான் செய்த ஒரே பெரு குற்றம் என்றார் டெட் கென்னடி.

அகதிகளின் காரணமாக எழுந்துள்ள அச்சுறுத்தல் பற்றி இந்தியா காட்டிவரும் பொறுமையை திரு. கென்னடி வெகுவாகப்பாராட்டியுள்ளார்.

சிங்கராஜாகாட்டில்

## கனடா உதவியுடன் மரம் வெட்டும் தொழில்

கோட்டை, செவ்வாய்
சிங்கராஜக் காட்டில் இயந்திரம் மூலம் மரம் வெட்டும் வேலை 3 கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்படுகிறது.

இதன் செலவுகளை கனடா அரசாங்கம் வழங்குகிறது. இதற்கான ஒப்பந்தம் ஒன்று இலங்கைக்கும் கனடாவுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது. 1972ம் ஆண்டின் தொடக்கத்தில் இத்திட்டத்திற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இங்கு வெட்டப்படும் பலகைகள் கொஸ்ஹம ஒட்டுப்பலகைத் தொழிற்சாலைக்கு அனுப்பிவைக்கப்படும். இத் தொழிற்சாலையில் இவை ஒட்டுப்பலகைகளாக்கப்பட்டு பல முறையில் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் தயாரிக்கப்படும். ஒட்டுப்பலகைத் தொழிற்சாலைக்கு 30 லட்சம் கனடா பலகைகள் ஆண்டொன்றுக்குத் தேவையா

(4-ம்பக்கம் பார்க்க)

## 'சி' எழுத்தையே சீனா விரும்புகிறது

நியூயோர்க், நவ. 2
ஐ. நா. வில் தன்னை ஆங்கில "சி" எழுத்தின் கீழ் வரிசைப்படுத்திக் கொள்ளும்படி மக்கள் சீனக்குடியரசு ஐ. நா.வுக்கு அறிவித்து அனுப்பியுள்ளது.

இதன் காரணமாக ஐ. நா. பாதுகாப்புசபையின் முதல் தடவையிலேயே தலைமைவகிக்கும் சந்தர்ப்பம் சீனாவுக்கு இல்லாமல் போகின்றது. மக்கள் சீனக்குடியரசு என்ற பெயரைக் குறிக்கும் ஆங்கில 'பி' எழுத்தின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டிருக்குமானால் இந்த மாதம் பாதுகாப்பு சபையின் தலைமைப் பொறுப்பை சீனா ஏற்றிருக்கமுடியும். ஆனால் கம்யூனிஸ்ட் சீனா தன்னை "சி" எழுத்தின் கீழ் வரிசைப்படுத்திக்கொள்ள விரும்புகின்றது.

"சி" எழுத்து தைவான் உட்பட முழு சீனாவையும் குறிப்பதாகக் கருதப்படுகின்றது.


# தம்பி அன் கோ.

ஆரம்பமாகி முப்பதாவது ஆண்டில்

ரூபா 1000/- ஜுபிலி சேமிப்பிற்கு
(Jubilee Deposit)
ஆறு ஆண்டுக்குப்பின் ரூபா 2000 கொடுக்கப்படும்

ரூபா 500/- ஜுபிலி சேமிப்பிற்கு
(Jubilee Deposit)
ஆறு ஆண்டுக்குப்பின் ரூபா 1000 கொடுக்கப்படும்

இடையில் இச்சேமிப்பை எடுத்தால்
வருடம் 8 சதவீத வட்டியுடன் கொடுக்கப்படும்

மறுவிபரங்களுக்கு!
**தம்பி அன் கோ.**
வண்ணார்பண்ணை — திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.


## ஷேக்குடன்தான் யாஹ்யா பேச்சு நடத்தவேண்டும்

### பிரிட்டிஷ் அரசும் ஆதரவு?

லண்டன், நவ. 2
கிழக்குப்பாகிஸ்தான் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஷேக்முஜிபுர் ரஹ்மானுடன் தான் பாகிஸ்தான் அரசாங்கம் பேச்சு நடத்தவேண்டும் என்ற கருத்தை பிரிட்டிஷ் அரசு ஆதரிக்கத்தொடங்கியிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது.

ஷேக்முஜிபுர் ரஹ்மானுடன் பேச்சு நடத்தும்படி யாஹ்யாகான் அரசைத் தூண்டுவதற்கு முயற்சி எடுப்பதுபற்றியும் பிரிட்டிஷ் அரசு ஆலோசிப்பதாகத் தெரிகின்றது.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் நிபந்தனை எதுவுமின்றி விடுதலை செய்யப்பட்டால் கிழக்கு வங்க நிலைமைசீரடையும் என்று இந்தியதரப்பில் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது.

### தாக்கும் எண்ணம் இல்லை ஆனால்...

பாகிஸ்தானை தாக்கும் நோக்கம் இந்தியாவுக்கு இல்லை ஆனால் இந்தியாவை பாகிஸ்தான் மூன்றுதடவை [illegible]. இன்னுமொருதாக்குதல் நடந்தால் அதற்கு ஏற்ற வகையில் இந்தியா தன்னைத் தயார் படுத்திக்கொள்ளாவிட்டால் இந்தியமக்கள் எம்மை ஒருபோதும் மன்னிக்கமாட்டார்கள்" என்று நேற்று இந்தியப் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி லண்டனில் கூறினார். பத்திரிகைநிருபர்களிடம் பேசிய திருமதி காந்தி, இந்தியாவுக்குள் வந்துசேர்ந்துள்ள கிழக்குப்பாகிஸ்தான் அகதிகள் பெரும்பான்மையானவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாய் இருந்தபோதிலும் திரும்பிப்போகவேண்டும் என்பதில் இந்தியா உறுதியாகவே இருக்கின்றது அவர்களைத் தொடர்ந்து நாங்கள் வைத்திருக்கமுடியாது. அவர்கள் திரும்பிப்போவதற்கான நிலைமை கிழக்குப்பாகிஸ்தானில் உருவாக்கப்படவேண்டும் என்று திருமதி காந்தி கூறினார்.

எல்லைப் பகுதியிலிருந்து வாபஸாகவேண்டும் என்று இந்தியா மட்டுமே கேட்கப்படுகின்றது. ஆனால் பாகிஸ்தான் இப்படிக்கேட்கப்படவில்லை என்றார் அவர்.

அகதிகள் திரும்பப்போவதற்கு இந்தியா தடைசெய்வதாக சிலர் அட்டைகளை ஏந்தி நேற்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதுபற்றி திருமதி காந்தியிடம் கேட்டபோது அட்டைகள் தாங்கி வந்தவர்களுக்காக அவர் அனுதாபம் தெரிவித்தார். ஹிட்லரின் ஜெர்மனிக்குள் திருப்பிச்செல்லும்படி யூதர்கள் எவரும் கேட்கப்படவில்லையே என்று திருமதி காந்தி பழையசம்பவங்களை நினைவுபடுத்தினார்.

பாகிஸ்தானுக்கு சீனா உதவிக்குவரும் என்று ஜெனரல் யாஹ்யாகான் கூறிவருவதுபற்றி கேட்டபோது இந்தியா எவ்வளவு அபாயகரமான நிலையிலிருக்கின்றது என்பதையே இது காட்டுகின்றது என்றார் திருமதி காந்தி.

திருமதி காந்தி நேற்று பிரிட்டிஷ் மகாராணியாரைச் சந்தித்துப்பேசினார். எலிஸபெத் ராணியாருடன் சுமார் 30 நிமிடங்கள் அவர் தங்கியிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எந்தத் தொழிலையும் பெருமையுடன் செய்ய முன்வர வேண்டும்"

## இளம் சந்ததியினருக்கு பொறியியல் நிபுணர் அறிவுரை

குருநகர், செவ்வாய்

'தகுதிக்கும் திறமைக்கும் இன்று பதவிகள் கிடைப்பது அரிதாகி வருகிறது. வைத்தியம், பொறியியல் போன்ற துறைகளில் பல்கலைக் கழகத்தில் கல்வி பெறுவதற்குத் தமிழ் மாணவர்கள் ஏனையோரை விடக் கூடிய புள்ளிகள் எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கின்றது. இந்த நிலையில் தமிழ் மாணவர்கள் தமது சிரத்தையாலும், முயற்சியாலும் தான் முன்னேற வேண்டும். எதிர்காலத்தில் சௌகரியமான வாழ்க்கை வாழ வேண்டுமென்ற மனோநிலையை மாற்றி தொழிற்கல்வியில் கூடிய நாட்டம் செலுத்துவதற்கு மாணவர்கள் முயல வேண்டும்'.

இவ்வாறு யாழ் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் முன்னாள் பிரதம எஞ்சினியரும் யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவருமான திரு ந. ஆ. வைத்தியலிங்கம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: 'இன்றைய மாணவர்கள் தான் நாளைய எமது தலைவர்கள் இதை மனதில் வைத்துச் செயல்பட வேண்டியது மாணவர்களதும், ஆசிரியர்களதும் கடமையாகும். எமது நாளைய சந்ததியில்தானெமது எதிர்கால முன்னேற்றங்கள் தங்கியிருக்கின்றன. வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரித்துவரும் இக்காலகட்டத்தில் எமது மாணவர்கள் எத்தொழிலையும் பெருமையுடனும் ஊக்கத்துடனும் செய்யவும் கற்கவும் முன்வரவேண்டும் 'செய்யுந் தொழிலே தெய்வம்' என்ற உன்னதநிலைக்கு எம்மை நாம் மாற்றி எமது எதிர்கால நல்வாழ்வை அமைத்துக்கொள்ள முன்வரவேண்டும்.

### ஆங்கிலமொழியின் அவசியம்

ஆங்கில மொழியைப் புறக்கணிக்கின்ற நிலை எமது மாணவர்கள் மத்தியில் ஏற்படக்கூடாது. அது உலக மொழி. அந்த மொழியின் மூலம் நாம் எத்தனையோ விஞ்ஞான, பொறியியல் கைத்தொழில் வளர்ச்சிகளையும் அனுபவங்களையும் அடையமுடிகின்றது. எமது மாணவர்களின் கல்விவளர்ச்சிக்கு வேறுதடைகள் இருந்தாலும் தமிழ் மாணவர்கள் ஆங்கில மொழியைப் பதவிக்கு மட்டும் கல்வி பயில்வது என்ற மனநிலையை மாற்றி நாம்பயிலும் கல்வி மூலம் நாம் சான்றோராக ஆகவேண்டும். எமது வாழ்க்கையில் நாம் சிறந்தவர்களாக ஒழுக்கமுடையவர்களாக வாழ்வதற்கும் எமது கல்வி பயன்படவேண்டும். இதற்கு சமயக்கல்வி அதி முக்கியமாகின்றது.

இதைவிட உடலும், மனமும் சுத்தமாகவும், திடகாத்திரமாகவும் இருந்தால் தான் நாம் வேகமாகவும், சுறுசுறுப்பாகவும் முன்னேற முடியும். இதற்கு விளையாட்டுத்துறை முக்கியமாகின்றது. உடல் சோர்வடைந்து பலவீனப்பட்டால் எமது மனமும் மூளையும் சோர்வுற்று எமது அறிவும் ஆற்றலும் குன்றிவிடும். எனவே கல்வி பயில்வது மட்டுமன்றி உடல் நலத்தையும் நாம் காப்பாற்றவேண்டும் என்றார். இக்கல்லூரி பழைய மாணவர் மன்றச் செயலாளர் டபிள்யு. எஸ். செந்தில்நாதன் நன்றி தெரிவித்துப் பேசினார்.

# தொழிலாளருக்கு ஆயுர்வேத சிகிச்சை

கொழும்பு, செவ்

வேலையில் ஈடுபட்டிருக்கும் போது தொழிலாளர்களுக்கு ஏற்படும் வெளிக்காயங்கள், உட்காயங்கள் முறிவுகள் போன்றவற்றுக்கு ஆயுர்வேத வைத்தியமுறைப்படி சிகிச்சைகள் பெற்றுக்கொள்ளக்கூடியதான புதியதிட்டம் ஒன்றை அரசு அமுலுக்கு கொண்டுவரவிருப்பதாகத் தெரிகின்றது. இதன்மூலம் திடீர்விபத்துக்களின் போது ஆங்கில வைத்திய சிகிச்சையைப் பெறவேண்டிய நிலைமை இல்லாமல் போகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆயுள்வேத வைத்திய முறையில் சிகிச்சைகள் பெற்றுத்தரும்படி துறைமுகத் தொழிலாளர் சங்கங்கள் பல அரசாங்கத்தைக் கேட்டுள்ளனவாம்.

# "புதிய கல்வித் திட்டத்துக்கு ஒத்துழைப்பு அளிப்போம்"

யாழ்ப்பாணம், புதன்

புதிய கல்வித் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இதனை அமுல் நடத்துவதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவோம்.

யாழ் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடந்த யுனெஸ்கோ வெள்ளிவிழா கருத்தரங்கிற்கு தலைமை தாங்கிய திரு. வி. குணரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: விஞ்ஞான ஆசிரியர்கள் சங்கம் அமைக்கப்பட்டநாள்முதல் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது. மாணவர்களிடையே விஞ்ஞான அறிவை வளர்ப்பதற்காக பல வழிகளைக் கையாண்டுவருகிறது. விஞ்ஞானம் படிக்க முடியாத மாணவன் ஒருவனாவது நமது நாட்டில் இல்லை. விஞ்ஞானம் வாழ்விற்கு அத்தியாவசியம்.

கருத்தரங்கில் நடத்திய பூர்வாங்க ஆராய்ச்சி பற்றிய அறிக்கையை, திரு. கே. எஸ். குகதாசன் சமர்ப்பித்தார் தீவின் இயற்கைவளங்கள், பறவைகள், மிருகங்கள், தாவரங்களின் விபரங்கள் பற்றி திருவாளர்கள் கே. செல்வவிநாயகம், எம். அம்புநாதன், எஸ். திருச்சிற்றம்பலம், ஜோய் சந்திராஜ், வி. இரகுநாதமுதலியார் ஆகியோர் உரையாற்றினார்கள். தீவைப்பற்றிய படங்களும் காண்பிக்கப்பட்டது.

யுனெஸ்கோவின் இலங்கை தேசியசபை செயலாளர் திரு எம். ராசபொன்னையா பேசும்போது யுனெஸ்கோ அபிவிருத்தி அடையாத நாடுகளுக்கு பல வழியாலும் பெரும் சேவை செய்து வருவதாகக் கூறினார்.

# சுவையான உலகச் செய்திகள்

### கங்காருக்கு ஆபத்து

ஆஸ்திரேலியர்கள் தங்கள் தேசிய மிருகமாகிய கங்காருவை வர்த்தக நோக்குடன் பெருமளவில் வளர்க்கிறார்கள். ஆனால் தற்போது இந்த மிருகத்தைப் பலர் இறைச்சிக்காகக் கொல்லுவதால் அதற்கு அழிவு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. இதை நிறுத்துவதற்கு ஆஸ்திரேலிய மக்கள் வனவிலங்குப்பாதுகாப்பாளர்களோடு சேர்ந்து இயக்கமொன்றை ஆரம்பித்துள்ளார்கள்.

மேலும் வேட்டையாடுபவர்களாலும் கங்காருவுக்கு அழிவு ஏற்படலாம் என மக்கள் பீதியடைந்துள்ளனர். ஆனால் வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகள் இவர் முன்னெப்பொழுதும் இல்லாதவாறு தற்போது கங்காருக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். நியூசவுத்வேல்ஸில் மட்டும் ஒரு கோடிக்கும் மேலான கங்காருக்கள் உள்ளனவாம்.

### நீதியிலும் இனப் பாகுபாடு

தென் ஆபிரிக்காவில் நீதிவழங்குவதிலும் இனபாகுபாடு காண்பிக்கப்படுகிறது. கடுங்குற்றம் புரிகின்ற வெள்ளையர்களுக்கு அநேகமாகத் தண்டனை கிடைப்பதில்லை. அப்படிக் கிடைத்தாலும் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே தண்டனைக்குள்ளாகிறார்கள். இதே குற்றங்களைப் புரியும் கறுப்பர்களுக்குக் கடுந்தண்டனை வழங்கப்படுகிறது.

இந்நாட்டில் குற்றச் செயல்களில் அதிகமாக நடைபெறுவது கொலையும் பலாத்காரமுமாகும். 1947ம் ஆண்டிலிருந்து 1966-ம் ஆண்டு வரையிலான சிறைச்சாலை இலாகா புள்ளிவிபரங்களை நோக்குமிடத்து 860 வெள்ளையர்கள் பலாத்காரத்தில் ஈடுபட்டதாக வழக்குத் தொடரப்பட்டது. ஆனால் 288 பேரே குற்றவாளிகளாகக் காணப்பட்டனர். இதேகாலத்தில் 1447 கறுப்பர்கள்மீது மேற்படி குற்றத்திற்காக வழக்குத் தொடரப்பட்டு 844 பேர் குற்றவாளிகளாகத் தண்டனை பெற்றனர். பலாத்காரத்தில் ஈடுபட்டதாகக் குற்றம்சாட்டப்பட்ட எந்த வெள்ளையருக்கும் மரணதண்டனை வழங்கப்படவில்லை. ஆனால் 121 கறுப்பர்களுக்கு இந்தக் குற்றத்துக்காக மரணதண்டனை அளிக்கப்பட்டது.

### சீனாவின் ஊசி சிகிச்சை முறை

சீனாவின் புராதன வைத்திய முறை விசித்திரமானது ஊசிகளைப் பயன்படுத்திப் பலவித நோய்களையும் குணப்படுத்தும் வைத்திய முறை சீனாவில் இருந்து வருகிறது. இது புதுமை முறையெனினும் சீனமக்கள் இதில் இன்னும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

இவ்வைத்திய முறை பற்றி சமீபத்தில் ஆராய்ந்த அமெரிக்க டாக்டர்கள் இவ்வைத்தியம் சமீபகாலத்திலும் கையாளப்பட்டு வருவ [illegible] தாகத் தெரிவித்துள்ளனர். இந்த வைத்திய முறையில் வைத்த அதிநம்பிக்கையே சீன மக்களிற் பலர் அதை நாடுவதற்குக் காரணம் என்பதை இந்த டாக்டர்கள் ஒத்துக்கொள்கின்றனர்' சில நோயாளிகளுக்கு மருந்துகள் எழுதிக்கொடுத்தாலும் அவர்கள் மேற்படி வைத்திய முறை போன்று ஏதாவது செய்ய படவேண்டும் என்பதையே விரும்புவதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

### அன்னிய மனைவியருக்கு இடமில்லை

அரபுநாடுகளில் அன்னிய மனைவிகளுக்கு இனி இடமளிக்க அரபு நாடுகள் தயாராயில்லை. இதை அன்னிய நாட்டுப் பெண்களை விவாகம் செய்வதற்குத் தடைவிதித்து சிரியா சமீபத்தில் சட்டம்கொண்டுவந்துள்ளதில் இருந்து அறிந்துகொள்ளலாம்.

அரபு இளைஞர்கள் பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குக் கல்வி கற்கச் சென்று அங்கு அந்நாட்டு மங்கையரை மணம் முடித்துக்கொண்டு நாடுதிரும்பி விடுகின்றனர். இவ்விளைஞர்கள் அரசியல் பொருளாதாரத் துறைகளில் நல்ல நிலைமையை அடையும்போது இப்பெண்களும் நல்ல புகழ்வாய்ந்த நிலைக்கு வந்துவிடுகிறார்கள். இதனால் அரபுக் குடும்பங்கள் தங்கள் புதல்வர்களை அன்னிய மகளிருக்கு இழந்து புதல்வியர்களோடு தான் இருக்கிறார்கள். 40 வருடங்களுக்கு முன்னரே இதுசம்பந்தமான பிரச்சினை அரபுநாடுகளில் எழுந்தது. சமீபத்தில்தான் இதற்குத் தீர்வுகாண சிரியா சட்டமியற்றியது.

ஜோர்டான் மன்னர் ஹுசெயினின் மனைவி பிரிட்டனைச்சேர்ந்தவர். அரசியல் துறையில் அன்னிய மாதர் [illegible]க்குப் பெற்றுள்ள [illegible] இது ஒரு உதாரணம்.

ஆசிரியருக்குக் கடிதம்

# கேள்விக்கொத்தை ஆசிரியர் ஆதரிக்கவேண்டும்

கடமையும் உரிமையும் ஒரே நேரத்தில் பிரசவிக்கும் இரட்டைக் குழந்தைகளல்ல. கடமை முந்தியது. உரிமை பிந்தியது. கடமைக்கு ஒருவரையறை இருப்பதுபோல உரிமைக்கும் வரையறை உண்டு. இந்த உரிமைவரையறை மீறப்படும்போதுதான் கொதிப்பும் கொந்தளிப்பும் ஏற்படவேண்டும். இந்த நோக்கில் வடமாநில வித்தியாதிபதியின் கேள்விக்கொத்து எந்த வகையிலும் ஆசிரியர்களின் உரிமையில் தலையிடவில்லை. இது ஆசிரியர்கள் மேல் ஏவப்பட்ட கேள்விக்கணையன்று. நிலைமையை அறிந்து பரிகாரம் தேடுவதற்கான கேள்விக்கொத்தாகும்

சென்ற வருட க. பொ. த. தேர்வு முடிவு கல்விப்பிரச்சினையில் ஈடுபாடுகொண்ட அனைவரின் சிந்தனையையும் தூண்டவேண்டும். இது பெற்றோருக்கு விசனமும் விசாரமும் ஏற்படுத்தியிருக்கிறது. சித்தி விகிதக் குறைவுக்குரிய காரணங்களை ஆராய்ந்து பரிகாரந்தேடுவது வித்தியாதிபதியின் தலையாய கடமை.

எதற்காக ஆசிரியர்கள் மிரளவேண்டும்? முதுகிலே புண் இருந்தால்தான் செடியிலே நுழையப் பயம்வரும். கடமையைச் செய்த ஆசிரியர்கள் கேள்விக்கொத்தை மனப்பூரிப்புடன் வரவேற்றிடல் வேண்டும்.

ஆசிரியர்களின் இடமாற்றமும் உயர்ச்சியும் மாத்திரம் ஆசிரிய நிறுவனங்களின் தனிப்பணியாக இருப்பது சரியல்ல காலத்துக்குக் காலம் கல்விப்பிரச்சினைகளை ஆராய்வதும் கல்வி வளர்ச்சிக்கு வேண்டியவற்றை அரசுக்குச் சிபார்சு செய்து கொண்டிருப்பதும் ஆசிரிய நிறுவனங்களின் முதற்பணியாகவேண்டும்

ஆசிரியர்கள் தங்கள் குழந்தைகளைத் தகுதியான கல்லூரிகளுக்கு அனுப்பப் பகீரதப்பிரயத்தனம் எடுத்துக்கொண்டும் அது போதாதென 'ரியூஷன்' நிலையங்களுக்கு அனுப்பிக்கொண்டும் ஏழைப் பிள்ளைகளின் கல்வியை உதாசீனப் படுத்துவது தெய்வத்திற்கும் அடாத செயலாகும்.

—மு. வேலுப்பிள்ளை
தலைமையாசிரியர்
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.

# இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45 மாலை 6-00, இரவு 9-00)

294 மீ அல்லது 59 மீ

காலை 6-15 நாதாஞ்சலி, 6-20 சைவநற்சிந்தனை, 6-25 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 பண்ணைச் செய்திகள், 7-15 பக்திப்பாடல், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதம்

இரவு 6-10 வாத்திய இசை, 6-15 கத்தோலிக்க இளைஞர் நிகழ்ச்சி, 6-30 இருகுரலிசை, 7-00 கண்ணகி காவியம், 7-15 திருக்குறள் அமுதம், 7-30 உலகச்செய்திகள், 7-30 வாத்தியக் கோஷ்டி, 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசைக்கச்சேரி, 10-35 ஒலிபரப்பு முடிவு

# நேர்முகப் பரீட்சை

பருத்தித்துறை, செவ்வாய்

இம்மாதம் 4ம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரில் நடக்கவிருக்கும் மூன்றாந்தரத் தலைமையாசிரியர் நேர்முகப் பரீட்சைக்குப் பல ஆசிரியர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுள் ஒன்றாக இவர்கள் பத்திரிகைகளுக்குச் செய்த விடயதானமும் இடம் பெறுவதாகத் தெரிகிறது. இவர்களுடைய இறுதி நேர்முகப் பரீட்சை கொழும்பு தலைமைக் கல்விக் காரியாலயத்தில் நடைபெறுமென அறியப்படுகிறது.

# நகரை ஒளிமயமாக்க வேண்டும்

காரம்பொன், செவ்வாய்

ஊர்காவற்றுறை பட்டின சபை இப்பமாதாந்தக் கூட்டத்தில் பட்டினசபை எல்லைக்குள் வெளிச்சம் பற்றாக்குறையாக இருப்பதினால் மேலதிகமாக 35 'மேக்குறி' மின் விளக்குகள் பொருத்தி நகரை ஒளிமயமாக்க வேண்டுமென்று ஏகமனதாக அங்கத்தவர்கள் தீர்மானித்துள்ளனர்.

### கனடா உதவியுடன்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விருக்கிறது.

இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கனடாப் பிரதமர் திரு. ரூடோவுடன் முன்பு நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே கனடா அரசாங்கம் இவ்வுதவியை வழங்க முன்வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடினமான உழைப்பு, சிக்கனம், எளிமை!

## அரசு ஆரம்பிக்கும் புதிய இயக்கம்

கோட்டை, திங்கள் கடின உழைப்பு, சிக்கனம், எளிமையான வாழ்வு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ் வாரம் பெரியதொரு இயக்கத்தை அரசாங்கம் ஆரம்பிக்கவிருக்கிறது.

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இவைகளை ஏற்று மக்கள் வாழ வேண்டுமென அவர்களை வற்புறுத்தும் நோக்கமாகவே மேற்படி இயக்கம் ஆரம்பிக்கப்படுகிறது.

வரவிருக்கும் வரவு-செலவுத் திட்டத்தின் சிக்கன நடவடிக்கைகளுக்கு இது ஆரம்பக் கட்டமாக அமைகிறது.

தங்களுக்குக் கிடைப்பதைக்கொண்டுவாழ்க்கையை நடாத்துவதற்குச் சோஷலிசத்தின் புதிய பரிசோதனையாக இது அமைகிறது.

அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் மேற்படி இயக்கத்தின் நோக்கங்களைப் பிரசாரஞ்செய்வர். அபிவிருத்தி செய்யக்கூடிய பொருட்களின் இறக்குமதியைத் தடைசெய்வதா அல்லது உணவுப் பொருட்களின் இறக்குமதியைத் தடைசெய்வதா என்ற இருகேள்விகளையும் மக்கள் முன் சமர்ப்பிப்பதே இப்பிரசார இயக்கத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இவ்விரண்டிலும் மேற்படி அதிகாரிகள் அபிவிருத்திப் பொருட்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதையே வற்புறுத்துவர்களெனக் கூறப்படுகிறது. ஏனெனில் இதன் மூலம் தான் துரிதமான பொருளாதார அபிவிருத்தியைக் காணமுடியும்.

# அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் ஆரம்பம்

கொழும்பு, திங்கள் அரசாங்க இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் இன்று தனது வியாபாரத்தை ஆரம்பிக்க விருக்கிறது.

திரு. புஞ்சி அப்புகாமி இக் கூட்டுத்தாபனத் தலைவராக இருப்பார். இக் கூட்டுத்தாபன வியாபார மூலம் 5 கோடி ரூபாவை சம்பாதிக்குமென அரசினர் நம்புகின்றனர். இரத்தினங்களை இக் கூட்டுத்தாபனத்திற்கு விற்பனை செய்யலாமென்றும், கூட்டுத்தாபனம் அளிக்கும் விலைபோதாதென்றால் மற்ற வியாபாரிகளுக்கு விற்பனவு செய்யலாமென்றும் தெரிகிறது. அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலத்திலிருந்துபெறப்படும் இரத்தினக்கற்களை கூட்டுத்தாபனத்திற்கு மட்டுமே விற்க முடியும்.

இரத்தினக்கல் கடத்தல் மூலம் வருடத்திற்கு 25 கோடி ரூபாவை இலங்கை இழந்து வருவதாக நிதி அமைச்சு மதிப்பீடு செய்துள்ளது.

பிறநாடுகளுக்கான இரத்தினக்கல் ஏற்றுமதி இனிமேல் கூட்டுத்தாபனம் மூலமே நடைபெறும். (சி.பி.ஏ)

பாக். கிரிக்கட் கோஷ்டி

# இலங்கை விஜயத்திற்கு இன்னும் அனுமதி இல்லை

கொழும்பு, திங்கள் இம்மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்த பாகிஸ்தான் கிரிக்கட் கோஷ்டிக்கு இதுவரையும் இலங்கை அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை என நம்பப்படுகிறது.

இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டியின் பெயர் விபரங்களை பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்திருந்தது.

இருந்த போதிலும் இலங்கை வரவிருக்கும் பாகிஸ்தான் கிரிக்கெட் கோஷ்டிக்கு அனுமதி வழங்க இலங்கை மறுக்கும் பட்சத்தில் இலங்கையிடம் பாகிஸ்தான் வாங்கும் தேயிலையை வாங்காமல் விடலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. (ச)

## கே. எல். ராவ் இலங்கை வருகிருர்

கோட்டை, திங்கள் இந்திய நீர்ப்பாசன மின்சார அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் இம்மாதம் 18ம் திகதி இலங்கை வரவிருக்கிருர்.

இலங்கைநீர்ப்பாசன மின்சாரநெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்காவின் அழைப்பை ஏற்று திரு. ராவ் இலங்கைக்கு விஜயம் செய்கிருர் இவர் இங்கு 21-ந்திகதிவரை தங்கியிருப்பார்.

## டாக்டர்கள் சேவை

கொழும்பு, திங்கள் அரசியல் தலையீடுகாரணமாக டாக்டர்கள் தங்கள் சேவைகளைச் சரியாகச் செய்யமுடியாமல் இருப்பதாக அரசாங்க வைத்தியர் சங்கம் சுகாதார அமைச்சரிடம் முறையிட்டுள்ளது.

அரசாங்கத்தாரின்தலையீடுகளும், முறையற்ற இடமாற்றங்களும் திறமைக்கு இடம் கொடாமையுமே டாக்டர்கள் தங்கள் சேவையைச் சரிவரச் செய்யமுடியாமல் இருப்பதற்குக்காரணம் என அவர்கள் மேலும் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச)

## தேசிய ஸ்ருடியோ நிறுவப்படும்

கோட்டை, செவ் அடுத்தாண்டு ஜனவரியிலிருந்து அரசாங்க திரைப்படக் கூட்டுஸ்தாபனம் இயங்கவிருக்கிறது.

இத்தகவலை ஞாயிற்றுக்கிழமையன்று தகவல் ஒலிபரப்பு அமைச்சர் ஜனாப் அப்துல் மஜீத் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டுஸ்தாபனத்துக்கு 5 அதிகாரிகள் விரைவில் நியமிக்கப்படவுள்ளார்கள். உள்ளூர் திரைப்படத் தயாரிப்பாளர்களுக்கு உதவி செய்யுமுகமாக தேசிய ஸ்ருடியோ ஒன்று நிறுவப்படவுள்ளது. உள்ளூர் கலைஞர்கள் திரைப்படத் தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியோர் அத்துறைகளில்

பிரதேசரீதியில் பல்கலைக்கழக அனுமதி:

# "இடம்மாறிப் பிறந்தவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி"

யாழ். இந்து அதிபர்

யாழ்ப்பாணம், செவ்வாய் 'பாடசாலைகளில் பிள்ளைகளை ஆரம்ப வகுப்புகளில் சேர்ப்பதற்கான வயதை 5 லிருந்து 6 ஆக உயர்த்திய பின்னர் பொருத்தமான பாடசாலைகளின்றிப் பாலர்கள் அவதிப்படக்கூடாது. நாடு முழுவதும் பாலர் கல்வி நிலையங்களை அரசாங்கம் நிறுவவேண்டும்'.

இவ்வாறு நேற்று நடைபெற்ற யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப்பரிசளிப்புவிழாவில் கல்லூரி அறிக்கையைச் சமர்ப்பித்துப்பேசிய அதிபர் திரு இ. சபாலிங்கம் கூறினார்.

சிரேஷ்ட, கனிஷ்ட, ஆரம்ப பாடசாலையென வகுக்கப்படுவது 6-ம் தர பாடவிதானங்களில் மாற்றங்களும் அதன் விளைவாக 9-ம் தரத்தில் தேசிய கல்விப்பத்திரப் பரீட்சை நடாத்தப்படுவதும் பாடசாலை அனுமதி வயது உயர்த்தப்படுவதுமான போன்ற சரியான வழியில் பல மாற்றங்கள் கல்விமுறைச்சிறுக் ஆலோசிக்கப்படுகின்றன. இவற்றை வரவேற்கும் அதே வேளையில் எச்சரிக்கையாக ஒரு வார்த்தையும் அவசியமாகிறது. வயது 5ல் இருந்து 6 ஆக்கப்பட்ட பின்னர், பொருத்தமான பாடசாலைகளின்றி பாலர் அவதிப்படக்கூடாது. பாலர் கல்விக்காக இலங்கை முழுவதும் ஏராளமான பாடசாலைகளை அரசாங்கம் நிறுவவேண்டும்' என்று அவர் சொன்னார்.

### பல்கலைக்கழக அனுமதி

பல்கலைக்கழக அனுமதி பற்றி அதிபர் திரு. சபாலிங்கம் கூறியதாவது.

பல்கலைக் கழகத்துக்கும் தொழில் நுட்பக் கல்லூரிக்கும் அனுமதி விபரங்கள் இன்னும் வெளிவரவில்லை. முடிவுகள் வெளிவருவதில் தாமதமேற்படுவதால் மாணவர்கள் விரக்தியடைந்துள்ளார்கள். இவ்வாண்டு பிரதேசரீதியாக அனுமதி வழங்கப்படும் என்று கூறப்படுகிறது. இதுஉண்மையானுல், திறமையும் பல்கலைக்கழகக் கல்விக்குத் தகுதியும் உள்ள மாணவரை இடம் தவறிப் பிறந்தமையால் நிராகரிப்பது அவர்களுக்கு இழைக்கப்படும்அநீதியாகும். இப்புதிய அனுமதித் திட்டத்தில் திறமைக்கு இடமளிப்பதே நீதியாகும். சில பிரதேசங்களில் உயர்கல்விக்கு வசதிகளில்லையாயின், உடனடியாக குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு அம்மாணவருக்கு உயர்கல்விக்கான வசதிகள் அளிக்க வேண்டுமேயன்றி பல்கலைக்கழகத்தில் இடம்பெறத் தகுதியுள்ளமாணவரை நிராகரிக்கக்கூடாது.

யாழ் இந்துவில் மாணவர் எண்ணிக்கைக்கு வகுப்பறைகளின் தொகை போதாதிருப்பதாகவும், மேலதிக வகுப்பறைகள் அவசர தேவையாயிருப்பதாயும், 10 ஆண்டுகளுக்குமுன் முன்னுள் முகாமையாளர்களாக்கமார் 40 ஆயிரம் ரூபா செலவில் மூன்றுமாடிக் கட்டிடத்திற்கு அத்திவாரமிடப்பட்டு கட்டிடம் நிறைவேறுதுமிடப்பதாயும், இக்கட்டிடத்தைப் பூரணமாக்கப் பெற்றோரும் பழைய மாணவரும் உதவ வேண்டுமென்றும் அதிபர் கேட்டுக்கொண்டார்.

விழாவிற் பிரதம விருந்தினராக புகையிரதப் பகுதி முன்னுள் பிரதம என்ஜினியர் திரு. ந. ஆ. வைத்திலிங்கம் கலந்துகொண்டார்; திருமதி வைத்திலிங்கம் பரிசுகளை வழங்கினர்.

## மரம் வெட்டிய குற்றச்சாட்டுகள்

கொழும்பு, செவ். சட்டவிரோதமாக மரங்களை வெட்டிஎடுத்துச் சென்றதாக 7054 குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளன. வன பாதுகாப்பாளரின் 1969-70-ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கையில் மேற்படி குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளன

வன பாதுகாப்பு இலாகாவின் திடீர் பரிசோதனைக் குழு தொடர்ந்தும் மேற்படி சட்டவிரோத செயலைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளதாக இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச)

# பக்தியின் அளவை அளவிடும் கருவி உண்டா?

## சுந்தரரிடம் எம். சி. கேள்வி

யாழ்ப்பாணம், செவ். "மாவிட்டபுரம் ஆலயத்துள் சென்று வழிபட விடாமல் சிறுபான்மைத்தமிழர்களை தடுத்தமைக்காக திரு. சி. சுந்தரலிங்கம், 1957-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சமூக குறைபாடுகள் ஒழிப்புச்சட்டத்தின் கீழ் மல்லாகம் கோர்ட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டார். இத் தீர்ப்பை இலங்கை உயர் நீதிமன்றமும் ஊர்ஜிதப் படுத்தியது. எம்நாட்டு நீதிமன்றங்கள் வழங்கிய தீர்ப்பை ஏற்கமறுத்து திரு. சுந்தரலிங்கம் பிரிவுக்கவுன்சிலுக்கு மேல்முறையீடு செய்து கண்டபலன் இலங்கையின் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்பையே மாட்சிமைதங்கிய மகாராணியாரின் உயர்நீதிமன்றமும் ஊர்ஜிதப் படுத்தியதாகும்."

இவ்வாறு அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் தலைவரும், நியமன எம். பியுமான திரு எம். சி சுப்பிரமணியம் நேற்றுவிடுத்த அறிக்கையில் தெரிவித்திருக்கிருர்.

அவர் அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது!

### குற்றவாளி குற்றவாளியே

"தோல்வியை ஒப்புக்கொள்ள மறுக்கும் திரு சுந்தரலிங்கம், தம் வழமையான விதண்டாவாதத்தை மீண்டும் மேற்கொண்டுள்ளார். அவரின் வாதப் பிரதிவாதங்கள் காலத்துக்கும் கருத்துக்கும் ஏன் இன்று நீதிமன்றங்கள் வழங்கியுள்ள தீர்ப்புக்கும் ஒவ்வாதவை என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகின்றது.

இராஜசமீபத்திய பத்திரிகை அறிக்கைகளும் இதையே புலப்படுத்துகின்றன.

நாம் தமிழ் பேசும் சைவ சமயத்தவர்களே. சைவ சமயத்திலும், அதன் வளர்ச்சியிலும் நாம் மிகவும் அக்கறை கொண்டவர்களே. இதற்றில் நாம் எவர்க்கும் சளைத்தவர்களல்ல.

சைவ சமயத்தவர்களில் (எச்சாதியினராயினும்) ஆசாரசீலர்களாக ஆலயங்களுக்குச்செல்லும் பொழுது அவர்களின் பக்தியின் அளவையும் ஆசௌசத்தின் (திரு. சுந்தரலிங்கம் கூறும்) தன்மையையும் மதிப்பிட திரு. சுந்தரலிங்கத்திடம் ஏதாவது நவீனமுறையில் அளவெடுக்கும் கருவி ஒன்றிருந்தால் அதைப் பொதுமக்கள் பார்வைக்கு சமர்ப்பிப்பாரா?

எனவே ஆலயங்களைப்பூட்டி வைத்து எல்லாப்பக்தர்களையும் வெளியே நிற்கவிட்டு ஏமாற்றவும்உழுத்துப்போன [illegible] உயர்த்திப்பிடித்துக்கொண்டாட்டம் ஆடவும். சைவப் பெருமக்கள் தொடர்ந்தும்இடம்கொடுக்கமாட்டார்கள் என்பதை திரு. சுந்தரலிங்கம் அறியும் நாள் தூரத்திலில்லை."

## தீ விபத்தில் யுவதி

பருத்தித்துறை, செவ். கரவெட்டியைச் சேர்ந்த கனகசபை இலக்குமி என்னும் 16 வயது யுவதி போத்தல்விளக்கால் ஏற்பட்ட தீக்காயங்களுடன் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிலமணி நேரத்தில் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். அவருடைய நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிகிறது.

## பெண்கள் மட்டும் சேவைக்கு முற்றுப் புள்ளி?

கொழும்பு, செவ். இலங்கைப் போக்குவரத்துச் சபை பெண்களுக்கு மட்டுமெனச் சேவையிலீடுபடுத்தப்பட்ட பஸ்கள் தற்போது செல்லாக்கிழந்துள்ளன.

இ. போ. ச.வின் சமீபத்திய மதிப்பீட்டிலிருந்து இது தெரியவந்துள்ளது. பெண்கள் சேவையில் 4 பஸ்கள் மட்டுமே தற்போது சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கொழும்புப் பெண்கள் இந்த பஸ்களைப் பயன்படுத்துவது மிகக் குறைவு எனவும் இந்த விசேஷசேவையால் இ. போ. சவுக்கு நஷ்டமேற்படுவதாகவும் இச்சேவையை விரைவில் இ. போ. ச நிறுத்தப்போவதாகவும் தெரியவருகிறது. (ச

## புனித அந்தோனியார் வெற்றி

கரம்பொன், செவ். புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்திற்கும் நேஞ்சல் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் புனித அந்தோனியார் கல்லூரி விளையாட்டுத்திடலில் நடைபெற்ற உதைபந்தாட்டத்தில் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக 'பி' பிரிவினர் 3—1 கோல்களால் வெற்றியீட்டினர். வண. பிதா ஜே. எஸ். வில்சன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

புத்தூர், செவ். புத்தூர் அற்புதாலய கலாமன்றத்தின் 7-வது ஆண்டுவிழா இம்மாத நடுப்பகுதியில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை மன்றச்செயலாளர் திரு. இ. மயில்வாகனம் கவனித்துவருகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

நேர்மையானது. நீதியானது என்று நாமே கருதிச் செய்யும் செயல்களிலேயே நமது மன அமைதியுடன் ஆனந்தம் அடங்கியுள்ளதே அல்லாமல் பிறர் சொல்வதையோ செய்வதையோ நாமும் செய்வதில் இல்லை.

— காந்தியடிகள்


# ஈழநாடு

Ceylon's National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box 49 Jaffna Telephone: 389

[illegible] விரோதிகிருது வருஷம் ஐப்பசி மாதம் 17-ந் திகதி (3-11-71)


## மாவிட்டபுரம்

புதிய சட்டப்படி சாதி அடிப்படையில் வழக்கம் காரணமாக இந்துக்கள் யாரையும் ஆலயத்துக்குச் சென்று வழிபட முடியாமல் தடுக்கலாமா? சட்டப்படி தடுக்க முடியாதென்று இலங்கையிலே இரு நீதிமன்றங்களும் தீர்ப்பளித்தன. இதை ஆட்சேபித்து பிரிவிகவுன்ஸிலுக்கு செய்து கொண்ட அப்பீலை அந்த நீதிமன்றமும் தள்ளிவிட்டு இலங்கையில் செய்யப்பட்ட தீர்ப்பையே ஊர்ஜிதம் செய்துள்ளது. அதாவது இந்துக்கள் யாரும் சாதி வேற்றுமையின்றி புதிய சட்டப்படி கோவில்களுக்குச்சென்று வழிபடலாம். இதை யாரும் தடுக்க முடியாதென்பதே அந்தத் தீர்ப்பு —— இது மிக முக்கியமான தீர்ப்பு. இந்து சமூகத்தைச் சேர்ந்த யாரையும் சாதி காரணமாக கோவில்களில் வேற்றுமைப்படுத்தி ஒதுக்க முடியாதென்பது சட்டமூலம் அசைக்க முடியாதபடி ஏற்பட்டுவிட்டது.

சாதியின் பேயரால் மனிதருக்கு மனிதர் செய்யப்பட்ட வேற்றுமைகளும் கொடுமைகளும் தான் இந்துசமயமும் சமூகமும் சீரழிந்து வலிவிழந்து மதம் மாறுவதற்கும் முக்கிய காரணமாகும். தீண்டாமை முதலிய தீயவழக்கம் இந்துசமூகத்தின் ஆணிவேரை அறுத்து அதைப்பட்டு வீழச் செய்துவிடுமென்று மகாத்மாகாந்தி முதலிய பெரியோர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். மேலும் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமை சாசனமும் மனிதருக்கு மனிதர் சரிசமமானவர்கள் என்றும் எக்காரணம் கொண்டும் அவர்களை வேற்றுமைப்படுத்தக் கூடாதென்றும் அறிவுறுத்தியுள்ளது. அதற்கிணங்க புதிய சட்டதிட்டங்களும் செய்யப்படுவதால், புதிய நிலைக்குத்தக்கபடி மனம்மாற வேண்டிய அவசியம் அதிகரித்து வருகின்றது.

நீண்டகாலமாக இருந்து வந்த ஒரு வழக்கத்தை மாற்றும்போது, சிலருக்கு அது பிடிக்காதது இயற்கையே. என்றாலும் காலச்சக்கரம் மிக வேகமாகச் சுழலுகின்றது. அதற்கேற்ப சட்ட திட்டங்களும் செய்யப்படும் போது, மனித நீதியை முன்னிட்டு மனம்மாறி அதற்கிணங்கக் காரியம் செய்வதே அறிவுடைமை. பிரிவிகவுன்ஸில் அளித்த தீர்ப்பை கௌரவித்து, இந்துசமயத்தைச்சேர்ந்த யாரும், இந்த ஆலயங்களுக்குச் சென்று வழிபட விரும்பின் அதை இனியும் தடுக்காமல் இருப்பதே சரியான வழியாகும்.

சாதி அடிப்படையில் தடுக்கமுடியாதென்றாலும் ஆசுசி முதலிய சமயகாரணங்களால் தடுக்கலாமென்று புதிதாகக் கூறப்படுகின்றது. கோவில்களின் புனிதத்தைக்காக்க வேண்டியதுதான். ஆனால் ஆசுசி உள்ளவர்கள், கோவிலுக்குச் செல்லும்படி யாரும் கேட்டாலும், போகமாட்டார்கள். அறியாத்தனமாகச் சிலர் செல்லக்கூடும். தென்னிந்தியக் கோவில்களில், முன்புறச் சுவர்களிலேயே கோவிலுக்கு எப்படிச் சுத்தமாகச் செல்லவேண்டும் என்பதை எழுதியிருக்கிறார்கள். அதுபோல் இங்கு செய்யலாம். இவ்விஷயத்தை அவரவர்கள் மனச்சாட்சிக்கு விட்டுவிடவேண்டுமேயன்றி, பிறர் தடுப்பது சரியோ அல்லது விரும்பத்தக்கதோ அல்ல. எந்தக்கோவிலிலும் இதைக் கையாளுவது அநுபவ சாத்தியமல்ல. சாதிகாரணத்தால் தடுக்க முடியாதவர்களை, சமய காரணம் சொல்லி தடுக்க முற்படுவது நேர்மையாகாது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் கருங்கல் திருப்பணி வேலைகள் இன்னும் பூர்த்தியாகவில்லை. இத்தகாரணமாக அங்கு இவ்வாண்டில் திருவிழாவும் நடக்கவில்லை. பழைய கசப்புகளை இத்துடன் மறந்து, மன்னித்து ஆலயத் திருப்பணியை பக்தர்கள் அனைவரும், ஒன்றுபட்டுப்பூர்த்தி செய்ய அன்புடனே முன்வரவேண்டிய சமயம் வந்துவிட்டது. இன்னும் வேற்றுமைகளை பார்த்துக் கொண்டுபோனால், பிறர் எள்ளிநகைக்காடுவர். இந்துசமயமும், சமூகமும் வளர்ந்தோங்க முடியாது. மாறாக மேலும் சீரழியும். இருதரப்பிலுமுள்ள அறிஞர்களும் இதை உணர்ந்து, பொதுநன்மையை முன்னிட்டு, சென்றுபோனதை மறந்து மன்னித்து ஆக்கவேலைகளில் ஈடுபட இறைவன் திருவருள் துணைசெய்வதாக.

# விசேஷ சேவை புரிந்தோருக்கு சலுகை

பாணந்துறை, செவ். இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படுகையில் சமீபத்திய கலவரங்களின்போது விசேஷ சேவை புரிந்தவர்களுக்கு முக்கிய சலுகைகள் அளிப்பதற்கு இ. போ. ச. முடிவு செய்துள்ளது.

இ. போ. ச. ஊழியர்களின் திறமைகளுக்கு ஏற்ப அவர்களுக்கு 100 [illegible] கள் விஷயத்திலிருந்து ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றும் இதில் ஜனவரி 8ம் திகதி சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேஷமாக 10 எண் [illegible]

# மனம்கவரும் நாவலர் சிறப்புமலர்

## ஐயாறன் எழுதுவது

நாவலர் பெருமான் முத்திரை வெளியீட்டு விழா சிறப்புமலர் ஒன்றை கொழும்பு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்சபையார் வெளியிட்டுள்ளனர். யாரப்போர் மறைவு கலைத்தக்கமுறையில் மேலட்டை அமைந்துள்ளது. வண்ணவண்ண மலர்கள் அழகுசெய்கின்றன.

மலர்க்குழுத் தலைவரும் மெய்கண்டான் அச்சக அதிபருமான இரத்தின சபாபதி அவர்கள், "நாவலர்" பெருமான் எம் தமிழ் இனத்தின் காவல் தெய்வம். சைவத்தைக் காத்து தமிழை வளர்த்து தமிழ்மக்களிடம் புதுயுகத்தை தோற்றுவித்த வித்தகன். தமிழ்மக்களின் ஆத்மீகம், அரசியல், சமூகம், கல்வி, மொழி முதலிய துறைகளில் அவர் புரிந்த தன்னலமற்ற பணிகள் எண்ணிறந்தவை.

"திசையறியாது தடுமாறிய தமிழ்மக்களுக்கு வழிகாட்டி, அவர்கள் வாழ்வுக்கு ஒளியூட்டிய ஒப்பற்ற தலைவரைக் கௌரவித்து அரசாங்கம் முத்திரை வெளியிடும் இந்நாள் ஈழத்துத் தமிழர்களின் இதயமெல்லாம் பூரிக்கும் பொன்னாளாகும். இந்த நந்நாளில் நாவலர்பெருமானுக்கு எம் சபையின் அஞ்சலியாக இச்சிறுமலரை அவரது பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றோம்" என்று பக்திஉணர்ச்சி ததும்ப சமர்ப்பணம் செய்துள்ளார்.

ஆசிரியர் சோமகாந்தன் அவர்கள் குறிப்பிடுவது போல், "இம்மலர் அளவிற் சிறியதெனினும் மனம் நிறைந்த அன்புடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. நல்லறிஞர்களின் விஷயங்கள் பண்டிதமணியின் கட்டுரை கவியோகியின் பாடல், நாவலர் பொன்மொழிகள் இவை அடங்கி இருப்பதால், மணமும் அழகும் கொண்டு மிளிர்கின்றது.

பண்டிதமணி எழுதியுள்ள ஒரு கட்டுரையில், "நாவலர் கோமிடில் நின்று ஒன்று சொன்னாலுஞ்சரி ஒருவரைச் சினந்து வைதாலும் சரி, அவருடைய சொற்கள் எழுத்துக்கள், செயல்கள் அனைத்தும் வைதிக சைவ மணங்கமழ்வனவே யாம்" என்று குறிப்பிடுகின்றார். சீர்திருத்த வீரரான நாவலர் பெருமான், சைவத்தைக் காப்பதற்காக காரசாரமாகப் பேசியும் எழுதியுமிருக்கலாம், என்றாலும் அவரது நோக்கமெல்லாம் சைவத்தையும் தமிழரையும் காக்கவேண்டுமென்பதே.

இன்று அவருக்கு அரசாங்கம் உள்ளிட்டு பொதுமக்கள் இவ்வளவு மரியாதைகள் செய்வதாயின், இதுவும் இறைவன் திருவருள் அல்லவா? அவரால் கண்டிக்கப்பட்டவர்கள், அவரைத் தங்களது விரோதி என்று கருதுவது பெருந்தவறு. அவர் கூறியுள்ளதை நிதானமாகப் படித்து யோசித்து அதற்கிணங்க சீர்திருந்தினால், அவர்கள் தங்களுக்கும், சைவத்துக்கும் மிக நன்மை செய்துகொண்டவர்களாவர்.

இன்னும் 8 வருடங்களில் அவரது நூற்றாண்டு விழா வர இருக்கின்றது. அதற்குள் நல்லூரிலுள்ள நாவலர் நிலையத்தை சமுதாயத்துக்கு நன்மையளிக்கக்கூடிய பல அம்சங்களைக் கொண்ட நவீன நிலையமாக-கலாபீடமாக நிறுவுவதற்கு சபை திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இந்த நிலையத்தால் நல்லூரே புதுப்பொலிவுபெற்று அங்கு சைவமணம் கமழ்கின்றது. நாவலர் பெருமானின் அருளால் இந்த நிலையம் மேலும் வளர்ந்தோங்க நூற்றாண்டு விழா பயனுள்ள முறையில் மிகச் சிறப்பாக நடைபெறுமென்று நம்புவது மிகையல்ல

0 0 0

'குங்குமம்' என்ற தமிழ் சஞ்சிகையின் திருக்கோணமலை மாநில மஞ்சரியைப் பார்த்தேன். சுமார் 150 பக்கங்கொண்டது. மேலட்டை வண்ணப்படத்துடன் கூடியது. திருகோணமலையின் சிறப்புகளையெல்லாம் ருசிகரமாகக் கூறுவதுடன் பல கதைகள், கவிதைகள் கட்டுரைகள் எல்லாம் அடங்கியுள்ளன. மிகவும் சிரமப்பட்டு இம்மலரை இளம் ஆசிரியர்கள் பாராட்டத்தக்க முறையில் தயாரித்திருக்கிறார்கள். வசதியும் ஆதரவுமிருப்பின் ஈழத்து இளம் எழுத்தாளர், மிகத் தரமான சஞ்சிகைகளை வெளியிட முடியுமென்பதற்கு இந்த மஞ்சரி ஓர் எடுத்துக்காட்டியாகும். இந்த சஞ்சிகை ஈழத்தில் மட்டுமன்றி தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரவவேண்டும். தெய்வீக மணம் கமழும் "குங்குமத்"துக்கு தமிழகம் நல்லாதரவு அளிக்க திருவருள் துணை செய்யுமாக'

0 0 0

தாயு நீயே தந்தை நீயே
சங்கரனே அடியேன்
ஆயு நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றதுள்ளம்
ஆயமாய காயந்தன்னுள்
ஐவர் நின்று ஒயட்டொட்டார்
மாயமேயென் றஞ்சுகின்றேன் வலிவலமேயவனே.

-திருஞானசம்பந்த சுவாமிகள்

## ஊரடங்கு நேரத்தில்...

கொழும்பு, செவ். வீதிகளைச் செப்பனிடவும், வாகன, பாதசாரிகள் போக்குவரத்து அடையாளங்களைத் தீட்டவும் ஊரடங்குச் சட்ட நேரங்களை கொழும்பில் பயன்படுத்திக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தவேலைகளைக் கவனிக்கும் கொழும்பு மாநகர சபைத்தொழிலாளர்களுக்கு கொழும்பு போக்குவரத்து பொலிசார் பொலிஸ் பாதுகாப்பு அளிக்க முன்வந்துள்ளனர்.

மிகவும் பழுதடைந்து உடனடியாகத் திருத்த வேண்டிய நிலையில் உள்ள வீதிகளைச் செப்பனிடுவதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(லி. பீ. ஏ.)

## டாக்ஸிக் கட்டணம்...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

ஒரு மைலுக்கு டாக்ஸிக்காரர்கள் ஒரு ரூபாய் வரை பி. ப. 9 மணி முதல் மு. ப. 6 மணிவரை மைலுக்கு 1-25 சத வீதம்மாத்திரமே அறவிடலாம்.

ஆனால் டக்ஸிமீட்டர்களைத் திருத்தி அதிக கட்டணம் வசூலிப்பது பொதுவாகவே நடைபெற்றுவரும் சம்பவம் என்று பொதுமக்கள் கூறுகிறார்கள். பெட்ரோல் விலை அதிகரிக்கப்பட்ட பின்னர் இந்த நிலைமை மேலும் மோசமாகிவிட்டதாகக் கூறப்படுகின்றது.

# "அடுத்த நூற்றாண்டில் இவர்கள் வாழ முடியாது"

பருத்தித்துறை, செவ். "அடுத்த ஆண்டில் இந்நாட்டில் கொண்டுவரப்படும் கல்வித்திட்டம் மிகப் பாரதூரமான ஆனால் மிக நல்ல விளைவுகளை ஏற்படுத்தவுள்ளது. 6-ம் வகுப்புத் தொடக்கம், கணிதம், விஞ்ஞானம், மொழி ஆகிய பாடங்கள் கட்டாய பாடங்களாக்கப்படவுள்ளன. இதற்காக அரசாங்கம் 5000 மேலதிக விஞ்ஞான, கணித ஆசிரியரை நியமிக்கவுள்ளது. இவற்றைவிட செய்முறைப் பாடங்கள் இரண்டும் சூழலுக்கேற்ற ஒரு தொழிற்கல்வியும் போதிக்கப்படவிருக்கிறது."

இவ்வாறு கல்விஅமைச்சின் நிரந்தரச் செயலாளர் கலாநிதி பிரேமதாச உடகம நேற்று முன்தினம் நடைபெற்ற புலோலி இந்துக் கல்லூரியின் 75-ம் ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போது குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. வீ. தம்பிப்பிள்ளை தலைமை தாங்கினார்.

தொடர்ந்து பேசிய கலாநிதி உடகம குறிப்பிட்டதாவது:

"இவ்வித புதிய திட்டங்களின் மொத்த விளைவாக 21-ம் நூற்றாண்டில் விஞ்ஞானமும், கணிதமும் தெரியாதவர் இவ்வுலகில் வாழ முடியாது தவிக்கும் நிலைமையும் உருவாகலாம். ஏனெனில் தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சியடைந்த ஒரு புதிய சமுதாயத்தில் விஞ்ஞானம் அறியாதவர்கள் தத்தளிப்பர். எனவே தான் ஒவ்வொருவரும் இப்புதிய கல்வித்திட்டத்தின் வெற்றிக்காக ஒவ்வொரு அவுன்ஸ் சக்தியையும் அர்ப்பணிக்கவேண்டும்."

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளர் திரு. எஸ். மகேசஸ்தாபகரின் பேச்சைவாசித்தார்.

கல்லூரிப் புதிய கட்டடநிதிக்காக உடனடியாக ரூபா 5000 சேர்க்கப்பட்டது. புதிய கட்டடம் உருவாக்கப்பட்டதும், அதற்கான உபகரணங்களை உடனுக்குடன் அளிப்பதாக வடமாநிலக் கல்வியதிபதி திரு. டபிள்யூ. டி. ஸி. மகாதந்திரில கூறினார்.

## வர்க்கபேதம் ஒழியவேண்டும்'

நுவரேலியா, செவ்வாய் நாட்டில் இருக்கும் வர்க்கபேதங்களை ஒழிக்கவும், டாக்டர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களுக்கு இருக்கும் அந்தஸ்து நாட்டிலுள்ள விவசாயிகள், தொழிலாளர்கள் போன்றவர்களுக்கும் கிடைக்கவும் கூடியதான சூழ்நிலை உருவாக்கப்படவேண்டும் என்று சமூக சேவைகள் அமைச்சர் திரு. டி. பி. தென்னக்கோன் நுவரேலியாவில் பாடசாலை வைபவமொன்றில் பேசுகையில் கூறினார்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் பெரிய கோவில் மேற்கு வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் 3-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org